# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 31 திங்கட்கிழமை 16.09.2024 கதிர் 362



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு - Yarl Muttram Youtube Channel




# தமிழ் மக்கள் ஜனாதிபதி தேர்தலில் சஜித்துக்கே வாக்களிக்க வேண்டும்

## ▶ நிலைப்பாட்டை வெளிப்படுத்தியது தமிழரசுக் கட்சி
## ▶ ஆறு பேரில் சிறிதரன் மட்டும் முடிவுக்கு எதிர்ப்பு

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய மக்கள் கூட்டணியின் வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பதென்ற எமது கட்சியின் மத்திய குழுத் தீர்மானத்திற்கு அமைவாக வாக்காளர்கள் உரியவாறு தங்கள் வாக்கை அவருக்கு வழங்க வேண்டும் என தமிழரசுக்கட்சி அறிக்கை வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதித்தேர்தல் தொடர்பான தீர்மானம் மிக்க உயர்மட்ட கலந்துரையாடல் வவுனியா தமிழரசுக்கட்சியின் அலுவலகத்தில் இன்று திங்கட்கிழமை நடைபெற்றது.

குறித்த கூட்டத்தில் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சி.சிறிதரன், செயலாளர் ப.சத்தியலிங்கம், முன்னாள் மட்டு மாநகரசபை மேயர் சரவணபவன், சி.வி.கே.சிவஞானம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

6➤




# கோட்டாபய, ரணில் ஆட்சி நிறுத்திய வீடமைப்பை மீண்டும் ஆரம்பிப்போம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச



நான் வீடமைப்பு அமைச்சராக இருந்தபோது நாடளாவிய ரீதியில் வீடமைப்புத் திட்டத்தை ஆரம்பித்தேன். கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரத்திற்கு வந்த உடனே அவற்றை நிறுத்தியதோடு, ரணில் விக்ரமசிங்க பதில் ஜனாதிபதியும் கோட்டாபயவின் அடித்தளத்தில் சென்று அந்த வீடமைப்புத் திட்டங்களை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தார். தான் ஜனாதிபதியானவுடன் அந்த வீடமைப்புத் திட்டங்களை மீளவும் ஆரம்பித்து கம் உதாவ திட்டத்தை செயற்படுத்துவேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு ஐக்கிய மக்கள் கூட்டணி ஏற்பாடு செய்த வெற்றி பேரணி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் நேற்று மட்டக்களப்பில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

பரம்பரை பரம்பரையாக விவசாயம் செய்து வந்த காணிகள் தற்பொழுது காடாகியிருக்கின்றது. அந்தக் காணிகளை மீளப் பெற்றுக்கொடுப்பதோடு, யானை மனித மோதலுக்கும் நடவடிக்கை எடுப்போம் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

அனைத்து பாடசாலைகளையும் சகல வசதிகளையும் கொண்ட பாடசாலைகளாக மாற்றுவதோடு, 5000 ஷரூபாவுக்கு 50 கிலோ கிராமுள்ள ஒரு மூடை உரத்தை வழங்குவோம். தொழில் இல்லாத இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்பை பெற்றுக் கொடுக்கும் வேலைத் திட்டங்களையும் ஆரம்பிப்போம் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

அத்தோடு யுவதிகளை மையப்படுத்திய பாரிய அபிவிருத்தி திட்டத்திற்கும் அடித்தளமிடுவோம். இன, மத, குல பேதங்களின்றி முழு நாட்டையும் அபிவிருத்தி அடையச் செய்யும் செயற்பாடுகளையும் முன்னெடுப்போம் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

# தமிழரசுக் கட்சியின் முடிவை ஏற்றுக்கொள்ளவே முடியாது

## சிறிதரன் எம்.பி. கடும் சீற்றம்



சஜித் பிரேமதாசவை ஆதரிப்பது என்ற தமிழரசுக் கட்சியின் தீர்மானத்தை நான் எதிர்க்கிறேன் என பாராளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக்கட்சியின் 6 பேர் கொண்ட குழுவின் உறுப்பினருமான சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

வவுனியாவில் உள்ள கட்சி அலுவலகமான தாயகத்தில் 6 பேர் கொண்ட குழு கூறியதன் பின்னர் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடரந்தும் கருத்து தெரிவித்த அவர், இன்றைய கூட்டத்தில் ஐந்து பேர் சஜித் பிரேமதாசாவுக்கு ஆதரவு தெரிவிக்கும் நிலைப்பாட்டில் இருந்தார்கள். அது தொடர்பாக ஒரு அறிக்கையும் எழுதப்பட்டிருந்தது. அந்த அறிக்கையில் ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி சஜித் பிரேமதாசாவுக்கு ஆதரவளிப்பதாகவே இருந்தது.

மத்திய குழுவில் கடந்த முதலாம் திகதி எடுக்கப்பட்ட தீர்மானம் பிழை என நான் எழுத்து மூலமாகவும் வழங்கி இருக்கிறேன். நான் ஒரு தெரிவு செய்யப்பட்ட தலைவர் என்ற ரீதியில் எழுத்து மூலமாக அறிவித்து விட்டு தான் பிரித்தானியா சென்று இருந்தேன். 6 ஆம் திகதி நான் மீளவும் இலங்கைக்கு திரும்புவேன்.

6➤

# வாழ்க்கைச் சுமைக்கான போராட்டம் அடுத்த வருடத்துடன் முடிவுக்கு வரும்

## பொருளாதார ஸ்திரத் தன்மையை பாதுகாத்து நிவாரணம் வழங்க முடியும் என்கிறார் ரணில்




மக்களின் வாழ்க்கைச் சுமைக்கான போராட்டத்தை அடுத்த வருடத்தில் முடிவுக்கு கொண்டுவருவதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார். பொருளாதாரத்தை முறையாக முகாமைத்துவம் செய்து, ரூபா மேலும் வலுவடையச் செய்து, பொருளாதார ஸ்திரத்தன்மையைப் பாதுகாத்து மக்களுக்கு நிவாரணம் வழங்க முடியும்

2➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# யாழில் இன்று சிறீதரனுடன் எம்.பியுடன் ஜனாதிபதி வேட்பாளர் திலகர் சந்திப்பு




ஜனாதிபதி வேட்பாளர் மயில் வாகனம் திலகராஜ் யாழ்ப்பாணத்துக்கு இன்று விஜயம் மேற்கொண்டு தேர்தல் பரப்புரைகளில் ஈடுபட்டார்.

இதற்கமைய இலங்கைத் தமிழரசுக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனை அவரது இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன் போது தனது தேர்தல் விஞ்ஞாபனத்தையும் சிறீதரன் எம்.பியிடம் அவர் கையளித்தார்.

இதேபோன்று யாழ்ப்பாணத்தில் பலரையும் திலகராஜ் சந்தித்து தனது தேர்தல் விஞ்ஞாபனத்தைக் கையளித்து கலந்துரையாடினார்.

## வாழ்க்கைச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என தெரிவித்த ஜனாதிபதி, நாட்டின் வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை மீட்க கடினமான தீர்மானங்களை எடுக்க வேண்டியுள்ளதாகவும் இறுதியில் நிவாரணம் கிடைக்கும் என்றும் சுட்டிக்காட்டினார்.

தெஹிவளையில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற 'ரணிலால் இயலும்' வெற்றிப் பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தக் கூட்டத்தில் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டதுடன் அவர்கள் ஜனாதிபதியை மிகவும் உற்சாகமாக வரவேற்றனர்.

கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேலும் தெரிவிக்கையில்,

புதிய பொருளாதாரம், புதிய நாடு மற்றும் புதிய அரசியல் முறைமையைக் கட்டியெழுப்பும் வேலைத் திட்டத்தை தாம் ஏற்கனவே ஆரம்பித்துள்ளதாக தெரிவித்தார்.

புதிய பொருளாதாரத்தை நாட்டுக்கு வழங்குவதே தனது தேவை எனத் தெரிவித்த ஜனாதிபதி, அதனை சஜித்துக்கோ அல்லது அனுரவுக்கோ செய்ய முடியாது எனவும் தெரிவித்தார். இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் என்னுடன் 38 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். ஆனால் இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஜனாதிபதி அல்லது பிரதமர் பதவியை ஏற்க யாரும் முன்வரவில்லை. அந்த பதவிக்கு வேறு யாரும் இல்லாததால் நான் அப்போது பிரதமரானேன்" என்று தெரிவித்தார்..

# சமூக ஊடக விளம்பரங்களுக்காக அதிகம் செலவிடும் வேட்பாளர்கள்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்கள் இதுவரை மெட்டா விளம்பரங்களுக்காக செலவிட்ட தொகை தொடர்பில் சமூக ஊடகங்களில் அதிகளவு விவாதங்கள் இடம்பெற்று வருகின்றன.

தற்போது சமூக வலைதளங்களில் பரவி வரும் ஒரு தரவு அறிக்கையால், இது குறித்து பலத்த விவாதம் ஏற்பட்டுள்ளதாக தென்னிலங்கை ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

ஜனாதிபதித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளராகப் போட்டியிடும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த 90 நாட்களில் மெட்டா விளம்பரங்களுக்காக 33,230,360 ரூபாவைச் செலவிட்டுள்ளதாக தொடர்புடைய தரவுகள் தெரிவிக்கின்றன.

அதேபோல் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச 32,514,220 ரூபாவையும், தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திஸாநாயக்க 7,142,795 ரூபாவையும் செலவிட்டுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சட்டத்தரணி விஜேதாச ராஜபக்ச, மெட்டா விளம்பரங்களுக்காக 8,579,955 ரூபாவைச் செலவிட்டுள்ளதாகத் தொடர்புடைய தரவு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ச இந்த பிரச்சாரங்கள் மற்றும் விளம்பரங்களுக்காக 665,202 ரூபாவை செலவிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மௌபிம ஜனதா கட்சியின் வேட்பாளர் திலித் ஜயவீர மற்றும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் ஜனக ரத்நாயக்க ஆகியோர் மெட்டா விளம்பரங்களுக்காக 1,907,165 ரூபாவை செலவிட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கண்டியில் மக்கள் திரண்டு ரணிலுக்கு அமோக ஆதரவு




கண்டியில் 'ரணிலால் இயலும்' என்ற தொனிப்பொருளில் பிராசரக் கூட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தக் கூட்டத்தில் பெருமளவான மக்கள் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்தன, இராஜாங்க அமைச்சர்களான அநுராத ஜயரத்ன, திலும் அமுனுகம, லொஹான் ரத்வத்தை, நாடாளுமன்ற உறுப்பினர்களான எம். வேலுகுமார், மஹிந்தானந்த அளுத்கமகே, உதயன கிரிந்திகொட, குணதிலக்க ராஜபக்ஷ, முன்னாள் அமைச்சர் தலதா அத்துகோரள, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் உள்ளிட்டோர் உரையாற்றினர்.

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உ ங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் - பாரம்பரிய முறையிலான வாழ்க்கை - ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் - பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி - தியான மண்டபம் - மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் - உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் - பாரம்பரிய உணவகம் - பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் - யோகா நிலையம்
விருந்தினர் விடுதி - சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் - தாரா பண்ணை
பூங்கா - நடைபயிற்சிப் பாதை - உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி - விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்
உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# அநுர, சஜித் அணிகளின் முக்கியஸ்தர்கள் ரணிலுடன் சங்கமம்!





தேசிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்து அவருடன் இணைந்துகொண்டனர்.

தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்று குழு உறுப்பினர் அனுஷ விமலவீர, தேசிய மக்கள் சக்தியின் குண்டசாலை தொகுதி அமைப்பாளர் சிசிர குமார செம்புவத்த மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் முஸ்லிம் விவகார செயலாளர் ஒ.கே. நவாஸ் ஆகியோர் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து இணைந்து கொண்டனர்.

கண்டியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற 'ரணிலால் இயலும்' என்ற தொனிப்பொருளிலான பிராசரக் கூட்டத்திலேயே மேற்படி மூவரும் ரணிலுடன் இணைந்துகொண்டனர்.

# சிங்கள வேட்பாளர்களுக்கு வாக்களித்து கடந்த காலத்தில் கண்ட பலன் என்ன?

## தொண்டமானாறு பரப்புரையில் விக்னேஸ்வரன் கேள்வி

"சிங்கள வேட்பாளர்களுக்கு வாக்களிக்க வேண்டும் என்று கூறும் எம் தமிழ் மக்கட் பிரிவினர் அவ்வாறு வாக்களித்து பின்னர் நாம் பேரம் பேசலாம் என்று கூறுகின்றார்கள். முன்னர் இவ்வாறு கூறித்தான் சிங்கள வேட்பாளர்களுக்கு எம் மக்கள் வாக்களித்தார்கள். ஆனால் கண்ட பயன் ஏதுமில்லை" என்று தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

தமிழ் பொது வேட்பாளர் அரியநேத்திரனின் ஆதரவுக் கூட்டம் இன்று காலை தொண்டமானாறு, அம்மா மணிமண்டபத்தில் நடபெற்றது. இதில் உரையாற்றிய விக்னேஸ்வரன் மேலும் தெரிவித்தவை வருமாறு -



"சிலர் தமிழ் பொது வேட்பாளருக்கு நாம் வாக்களித்தால் சிங்கள வேட்பாளர்களை ஆத்திரமடையச் செய்து விடுவோம் என்று கூறுகின்றார்கள். அவர்கள் ஆத்திரம் அடைந்து ஏதாவது செய்தால் அது எமக்கே நன்மையைத்தரும்.

தமிழ் மக்களை சுயமாகச் சிந்தித்து செயலாற்றவிடாமல் சிங்களத் தலைவர்கள் இதுவரை காலமும் செயற்பட்டவாறே இப்பொழுதும் செயற்படுகின்றார்கள் இதுவே அதற்கு ஒரு சிறந்த உதாரணம் என்று உலக நாடுகளுக்கு நாம் கூறமுடியும்.

தற்போது உலக நாடுகள், முக்கியமாக ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம், இதுவரை காலமும் இலங்கை தனது கடமைகளில் இருந்து தப்பித்து வந்தமை பற்றி அறிக்கைகள் இட்டுள்ளன. இந்த நேரத்தில் தமிழர்களுக்கு நன்மை செய்ய சிங்களத் தலைவர்கள் தலைப்படுவார்களேயன்றி தீங்கு விளைவிக்க விரும்பமாட்டார்கள்.

அதுமட்டுமல்ல! பேராசிரியர் பீரிஸ் கடந்த வாரம் என்னை வந்து என் வீட்டில் சந்தித்த போது சிங்கள மக்கள் இன ரீதியான கருத்துக்களைத் தற்போது விரும்புவதில்லை என்றும் அவர்கள் இவ்வாறான கருத்துக்களால் கவலையுற்றும் களைத்துப் போயும் உள்ளார்கள் என்றும் கூறினார்.

அவர் வந்த காரியம் வெற்றியடையவில்லை. நாங்கள் திடமாக தமிழ் பொது வேட்பாளருக்குப் பின்னாலேயே அணி வகுத்து நிற்கப் போகின்றோம் என்ற என் கருத்தை அவர் சுமந்து திரும்பினார்.

சிங்கள வேட்பாளர்களுக்கு வாக்களிக்க வேண்டும் என்று கூறும் எம் தமிழ் மக்கட் பிரிவினர் அவ்வாறு வாக்களித்து பின்னர் நாம் பேரம் பேசலாம் என்று கூறுகின்றார்கள். முன்னர் இவ்வாறு கூறித்தான் சிங்கள வேட்பாளர்களுக்கு எம் மக்கள் வாக்களித்தார்கள். ஆனால் கண்ட பயன் ஏதுமில்லை. இவ்வாறு பேரம் பேசப் போவதாகக் கூறுபவர்கள் முதலில் கடந்த கால பேரப் பேச்சுக்களினால் எதனைப் பெற்றுக் கொடுத்தார்கள் என்பதைக் கூற வேண்டும். வெல்ல முடியாது என்று கண்டவுடன் அடக்கு முறையாளர்களுடன் கைகோர்க்க வேண்டும் என்பதா இவர்களின் அரசியல் சித்தாந்தம்?"

இவ்வாறு அவர் தெரிவித்தார்.



# மீண்டும் ஆரம்பமாகியுள்ள நாகை - யாழ். கப்பல் சேவை




மாயகிருஷ்ணன் கண்ணன்

தமிழ்நாட்டின் நாகப்பட்டினத்தில் இருந்து இலங்கைக்கு தற்போது கப்பல் போக்குவரத்து துவங்கியிருக்கிறது. ஆனால், தமிழ்நாட்டிற்கும் இலங்கைக்கும் இடையில் கடல் வழியிலான போக்குவரத்து என்பது சில ஆயிரம் ஆண்டுகள் பழமையானது.

தமிழ்நாட்டின் நாகப்பட்டினத்தில் இருந்து இலங்கையின் காங்கேசன்துறை வரை தற்போது கப்பல் போக்குவரத்து துவங்கி, நடந்து வருகிறது.

தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்குச் செல்பவர்கள் பெரும்பாலும் விமானத்தின் மூலமே சென்றடைகிறார்கள் என்றாலும், தமிழ்நாட்டிற்கும் இலங்கைக்கும் இடையிலான உறவில், கப்பல் போக்குவரத்திற்கு முக்கியமான இடம் இருந்தது.

தமிழக கடற்கரை பகுதிகளான நாகப்பட்டினம், மரக்காணம், பூம்புகார், மாமல்லபுரம் உள்ளிட்ட துறைமுகங்களில் இருந்து சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே கப்பல் போக்குவரத்து நடந்து வந்தது.

இதுகுறித்து பேசிய தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழக துறைத் தலைவரும் கடல்சார் வரலாறு மற்றும் கடல்சார் தொல்லியல் துறையின் முன்னாள் பேராசிரியருமான சு.இராசவேலு, இலங்கைக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையிலான போக்குவரத்தில் நாகப்பட்டினம் துறைமுகம் முக்கியப் பங்கு வகித்ததாகக் கூறினார்.

“பல்வேறு நாடுகளைச் சேர்ந்த வணிகக் கப்பல்கள் 2,500 ஆண்டுகளாக தமிழகத்தின் துறைமுகங்களில் நங்கூரம் இட்டன. தமிழகத்தின் வணிகர்கள், வணிகக் குழுக்களாக இணைந்து பல்வேறு நாடுகளோடு வர்த்தகம் செய்ததாகக் கூறும் சு.இராசவேலு, “அவ்வகையில் நாகப்பட்டினம் 2000 ஆண்டுகளுக்கும் மேலாக துறைமுக நகராக விளங்கி வந்திருக்கிறது,” என்றார்.

அவரது கூற்றுப்படி, நாகப்பட்டினம் அயல் நாட்டு ஆய்வாளர்களால் நிகமா என அழைக்கப்பட்டது. கிரேக்கப் பயணியான தாலமி தமிழ்நாட்டின் கிழக்குக் கடற்கரை பகுதியில் உள்ள நிகமா என்னும் துறைமுக நகரைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.

“நிகமா என்று அவர் குறிப்பிடும் துறைமுக நகரம் நாகப்பட்டினம்தான் என ஸ்காட்லாந்தை சார்ந்த நிலவியல் அறிஞரும் கடலோடியுமான கர்னல் யூல் கி.பி.1873ஆம் ஆண்டு அடையாளம் கண்டார்.

சங்க காலத்தில் காவேரிப்பூம்பட்டினம் ஒரு சிறந்த துறைமுகமாக விளங்கி வந்ததால், சங்க கால இலக்கியங்களில் நாகப்பட்டினம் துறைமுகம் தொடர்பான செய்திகள் அதிகம் நமக்குக் கிடைக்கவில்லை.

எனினும் நிகமா என்னும் பெயர் நாகப்பட்டினத்தைக் குறிக்கலாம் என்ற குறிப்பிலிருந்து இக்கடற்கரை நகரம் கடல் வாணிகம் செய்து வந்த பெருவணிகர்களைக் கொண்டு விளங்கி வந்துள்ளதை அறிய முடிவதாக” கூறுகிறார் பேராசிரியர் சு.இராசவேலு.

நிகமா என்னும் சொல் தமிழிக் கல்வெட்டுகளிலும், மட்கல ஓடுகளிலும் குறிக்கப்பட்டுள்ள வணிகக் குழுவோடு தொடர்புடையது. நிகமம் என்றால் பெருவணிகர்கள் வாழ்கின்ற ஊர் எனப் பொருள்படும். எனவே நாகப்பட்டினம் 2,500 ஆண்டுகளுக்கு முன்பே மிகச் சிறந்த வணிக நகரமாக விளங்கியிருக்கலாம் என்கிறார் பேராசிரியர் இராசவேலு.

கி.பி. 6ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தேவராப் பாடல்களில் இந்நகரம் பற்றிய குறிப்புகள் உள்ளன. மாட மாளிகைகளையும் மணிமண்டபங்களையும் நெடிய மாடங்களையும் நீண்ட வீதிகளையும் கொண்டு, அலை தழுவும் நகரமாகவும் கோட்டை மதிலுடன் கூடிய நகரமாகவும் இந்நகரைப் பற்றி தேவாரப் பாடல் குறிப்பிடுகிறது.

இந்நகரில் பல வணிகர்கள் வாழ்ந்ததையும் பல நாட்டுப் பொருள்கள் விற்பனை செய்யப்பட்டதையும் குதிரைகள் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டதையும் தேவாரப் பாடல்கள் குறிக்கின்றன. தொடக்க கால கல்வெட்டுகளிலும் தேவாரப் பாடல்களிலும் நாகப்பட்டினம் நாகை எனும் பெயரில்தான் வழங்கப்பட்டுள்ளது.

நாகையில் சீனக் காசுககளும் சீனர்கள் பயன்படுத்திய பானை ஓட்டுச் சில்லுகளும் கிடைத்துள்ளன. இதனால், சீனாவிலிருந்து கப்பல்கள் இத்துறைமுகத்தில் நங்கூரம் இட்டு பின்னர் இலங்கைத் தீவிற்கும் பிற நாடுகளுக்கும் சென்றிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

நாகப்பட்டினத்தில் உள்ள நாகநாதர் கோவிலில் உள்ள தனிக்கல் ஒன்றில் “நாகைப் பெருந்தட்டான்” என்ற பெயர் காணப்படுகிறது. கிபி. 7ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இக்கல்வெட்டே இவ்வூரில் கிடைக்கும் பழமையான கல்வெட்டாகும். இக்கல்வெட்டு பல்லவர் கால எழுத்து வடிவில் இருக்கிறது.

எனவே பல்லவர்களின் ஆட்சிக்கு உட்பட்ட பகுதியாக நாகை விளங்கியிருக்கலாம் எனக் கூறுகிறார் சு.இராசவேலு. “தட்டான் என்பது உலோக வேலைப்பாடுகள் செய்கின்ற மக்களைக் குறிக்கும். சோழர் காலத்தில் நாகையில் தயாரிக்கப்பட்ட பல பௌத்த படிமங்கள் தென் கிழக்காசிய நாடுகளுக்கும் இலங்கைக்கும் சென்றுள்ளன.”

சிற்பிகளும் வணிகர்களும் வாழ்ந்த பகுதியாக இந்நகரம் இருந்திருக்கிறது என்பதை வரலாற்று, இலக்கிய, மற்றும் தொல்லியல் தரவுகள் மூலம் புரிந்துகொள்ளலாம்.

இந்நகரம் காவிரி ஆற்றின் கிளை ஆறுகளான குடவையாறு மற்றும் உப்பனாறு ஆகிய ஆறுகளின் இடைப்பட்ட பகுதியில் அமைந்திருந்ததால், தேவாரத்தில் இந்நகர் “கழி சூழ் கடல் நாகை” எனக் குறிப்பிடப்படுகிறது.

அப்பரும், சம்பந்தரும் நாகை துறைமுகத்தில் பல்வகை கலங்கள் நின்றிருந்ததைக் குறிப்பிடுவதுடன் இத்துறைமுகத்தில் கற்பூரமும் யானைகளும் கப்பல்களில் ஏற்றி நிறுத்தப்பட்டிருந்ததையும் துறைமுக கண்காணிப்பாளர்கள் இவற்றுக்குச் சுங்கவரி வசூலித்ததையும் குறிப்பிடுகின்றனர்.

ஆரம்பத்தில் நாகை எனக் குறிப்பிடப்பட்ட இந்நகரம், சோழர் காலத்தில்தான் பட்டினம் என்னும் வார்த்தையுடன் சேர்ந்து நாகப்பட்டினம் என்ற பெயருடன் அழைக்கப்படலாயிற்று. நாகை என்னும் பெயர் கடல் சங்கைக் குறிக்கும் நாகு என்னும் பெயரிலிருந்து வந்திருக்கலாம் என்கிறார் சு.ராசவேலு.

பல்லவர்களின் வீழ்ச்சிக்குப் பிறகு தஞ்சையைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சிபுரிந்த சோழர்கள் தொன்மைத் துறைமுகமான காவேரிப்பூம்பட்டினத்தைத் தவிர்த்து நாகப்பட்டினத் துறைமுகத்திற்குச் சிறப்பிடம் அளித்தனர். இவர்கள் காலத்தில் இந்நகரம் மிகச் சிறந்த வணிக நகரமாகவும் சோழர்களின் கப்பற்படை இருந்த நகரமாகவும் விளங்கியது.

முதலாம் பராந்தக சோழர் தனது மூன்றாவது ஆட்சியாண்டில் ஈழத்தைக் கைப்பற்றி ‘மதுரையும் ஈழமும் கொண்ட கோப்பரகேசரி’ என்னும் பட்டத்தை வைத்துக் கொள்கின்றார். எனவே இந்த மன்னரின் ஆட்சிக் காலத்திலேயே சோழர்கள் சிறந்ததொரு கப்பற்படையை வைத்திருந்துள்ளனர் என அறியலாம்.

அதன்மூலம் இலங்கையைக் கைப்பற்றியதுடன் இலங்கை அரசர்களுடன் நட்புறவு பாராட்டிய பாண்டியர்களையும் முதலாம் பராந்தக சோழர் வெற்றி பெற்றார். தொடர்ந்து சோழ மன்னன் ராஜராஜன் காலத்தில் அவரது மகன் ராஜேந்திர சோழன் நாகப்பட்டினத்தை சோழர்களின் சிறந்த துறைமுக நகரமாக மாற்றியதோடு பல கப்பல்களை அங்கிருந்து செலுத்தும் வகையில் நாகை துறைமுகத்தை விரிவுபடுத்தினார்.

கேரளப் பகுதியிலிருந்து வந்த வணிகர்களும் தென் கிழக்கு ஆசிய நாடுகளுக்கும் இலங்கைக்கும் செல்ல நாகைப்பட்டினத்துறைமுகத்தையே பயன்படுத்தியுள்ளனர்.

நாகை அருகேயுள்ள கீழையூர் சிவன் கோவிலில் யவனர்கள் குறித்த முதல் கல்வெட்டு கண்டெடுக்கப்பட்டது. நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் வட்டத்துக்கு உட்பட்ட கீழையூர் கைலாசநாதர் கோவிலில் கி.பி.1287ஆம் ஆண்டைச் சார்ந்த பாண்டிய மன்னன் சுந்தரபாண்டியன் காலக் கல்வெட்டில் “யவனர் திடர்” என்ற சொற்கள் கிடைக்கின்றன.

தமிழகத்தில் யவனர்கள் பற்றிய சொல் பயன்பாட்டுடன் கூடிய முதல் கல்வெட்டு இதுதான். ‘யவனர் திடர்’ என்பது ‘யவனர் திடல்’ எனப் பொருள்படும். இது, யவனர்கள், அதாவது மத்திய தரைக் கடல் பகுதியிலிருந்து வந்த வணிகர்கள் குடியிருந்த பகுதியாகக் கருதப்படுகிறது.

சோழர்களுக்குப் பின் தஞ்சாவூர் நாயக்கர் காலத்திலும் இத்துறைமுக நகரம் மிகச்சிறந்த இடத்தைப் பெற்றிருந்தது.

சுதந்திரத்திற்குப் பிறகும் தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்கு கப்பல் போக்குவரத்து இருந்து வந்த நிலையில், அங்கு ஏற்பட்ட உள்நாட்டுப் போருக்குப் பிறகு அது நிறுத்தப்பட்டது.

நாற்பது ஆண்டுகளுக்குப் பிறகு கடந்த ஆண்டு மீண்டும் தமிழ்நாட்டிற்கும் இலங்கைக்கும் இடையில் கப்பல்போக்குவரத்து தொடங்கப்பட்டது. போதிய பயணிகள் இன்மையால், அந்தச் சேவை நிறுத்தப்பட்டு, இந்த ஆண்டு மறுபடியும் தொடங்கப்பட்டிருக்கிறது. (பி.பி.சி)

# அதிரடித் திருப்பங்கள் ஏற்படுமா? பரபரப்பாகியிருக்கும் கொழும்பு!

## கட்சித் தாவல்கள் இடம்பெறலாம் என எதிர்பார்ப்பு




எதிர்வரும் சனிக்கிழமை ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவிருக்கும் நிலையில், ஜனாதிபதித் தேர்தலுக்கான பரப்புரை நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தை நெருங் கியுள ளது. இந்த நிலை யில் எதிர் வரும் நாட் கள் அதிரடி அரசியல் திருப்பங களுடனான தீர்மானம்மிக்க நாட்களாக இருக்கும் என்று கூறப்படுகின்றது.

ஜனாதிபதித் தேர்தல் எதிர வரும் சனிக்கிழமை தேர்தல் நடைபெறவிருக்கும் நிலையில், அதற்கான பரப்புரை நடவடிக்கைகள் நாளை மறுதினம் புதன்கிழமை நள்ளிரவுடன் முடிவடையவுள்ளது. அடுத்துவரும் மூன்று தினங்களும் பிரதான வேட்பாளர்கள் அனைவரும் சூறாவளிப் பிரப்புரைகளுக்கான திட்டங்களை வகுத்திருக்கின்றார்கள்.

பரப்புரை நடவடிக்கைகள் முடிவடைவதற்கு முன்னர் பிரபல அரசியல்வாதிகள் சிலர் கட்சித் தாவல்களில் ஈடுபடலாம் என்றும், அதற்கான பேச்சுவார்த்தைகள் இரகசியமாகஇடம்பெற்றுவருவதாகவும் அரசியல்தகவல்கள்தெரிவிக்கின்றன.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவான அரசாங்கதரப்பில்இருந்தும் அதேபோன்று சஜித்பிரேமதாசவுக்கு ஆதரவான எதிர்க்கட்சித் தரப்பில் இருந்தும்இவ்வாறான கட்சிதாவல்கள் இடம்பெறலாம்என்று கூறப்படுகின்றது.

இதேவேளை வேறு கட்சிகளை சேர்ந்த சிலர் தமது ஆதரவு தொடர்பான தீர்மானங்களை மாற்றிக்கொண்டுள்ளதாக அறிவிக்க வாய்ப்பு உள்ளதாகவும் அரசியல் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனால் இறுதிக் கட்டப் பரப்புரை நடவடிக்கை வரையான இந்தக் காலப்பகுதி மிகவும் தீர்மானமிக்கவையாக இருக்கும் என்று அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளையில், கொழும்பு உட்பட நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. பொலிஸார் உஷார் நிலையில் வைக்கப்பட்டிருக்கும்அதேவேளையில், முப்படைகளும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

தேர்தல் பரப்புரைகளுக்கு இன்னும் இரண்டு நாட்கள் மட்டுமே உள்ளதால், இக்காலப் பகுதியில் அதிகளவிலான கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. புதன்கிழமை நள்ளிரவு 12.00 மணிவரை கூட்டங்களை நடத்தலாம் என்பதால், இன்றைய தினம் தமது கட்சிகளின் சார்பில் பிரமாண்டமான கூட்டங்களை அனைத்துக் கட்சிகளுமே ஏற்பாடு செய்துள்ளன.

# நாடு முழுவதிலும் சஜித் அலை வெற்றியைத் தடுக்க முடியாது

## மானிப்பாய் கூட்டத்தில் ரிஷாட் முழக்கம்



சஜித் பிரேமதாசவின் வெற்றியே நாடு முழுவதும் தென்படுகிறது. பிரச்சாரங்களில் ஈடுபட்டு வருவதால், கிடைத்துள்ள அனுபவத்தின் அடிப்படையிலேயே இதனைத் தெரிவிப்பதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளர்.

ஐக்கிய மக்கள் கூட்டணியின் தலைவர் சஜித் பிரேமதாசவை ஆதரித்து, மானிப்பாயில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடந்த பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது,

"ரணில் விக்ரமசிங்கவுடன் கூட்டுச் சேர்ந்துள்ளவர்கள் நாட்டைச் சூறையாடியவர்கள். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வுடன் சேர்ந்து, இவர்கள்தான் நாட்டின் வளங்களைச் சூறையாடினர். இனவாதத்தைக் கட்டவிழ்த்து சமூகங்களை ஒடுக்கினர். மதவாதிகளுக்கு முதலிடமளித்து எமது மத நம்பிக்கைகளை கொச்சைப்படுத்தினர்.

வரலாற்றில் இடம்பெறாத மிகப் பெரிய ஊழல்கள் ரணிலின் அமைச்சரவையில் இடம்பெற்றன. கோட்டாபய ராஜபக்ஷவின் எஞ்சிய காலத்தை ஆள வந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் ஊழல்வாதிகளையே பாதுகாக்கிறார். இதனால், சிங்கள மக்கள் ரணில் விக்ரமசிங்கவையும் எதிர்க்கின்றனர். மூன்றாவது இடத்திலேயே ரணில் உள்ளார். முதலாம் இடத்திலுள்ள சஜித் பிரேமதாசவின் வெற்றி நிச்சயிக்கப்பட்டுவிட்டது.

மாற்றம் வேண்டிப் போட்டியிடும் அனுரகுமார திஸாநாயக்கவுக்கு அனுபவம் போதாது. எனவே, இவர் ஆட்சிக்கு வந்தால் ஆறு மாதங்களில் கியூ வரிசை வந்துவிடும். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சஜித்தின் ஆதரவு உச்சத்தை தொட்டுவிட்டது. எனவே, உங்கள் வாக்குகளை வீணடிக்காமல் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவாக, டெலிபோன் சின்னத்துக்கு வாக்களித்து வெற்றியின் பங்காளராகுங்கள்" என்றார்.



## தமிழ்மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குறித்த கலந்துரையாடலின் பின்னர் தமிழரசுக்கட்சியின் தீர்மான அறிக்கை கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவால் வாசிக்கப்பட்டது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் எதிர்வரும் சனிக்கிழமை ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவிருக்கின்றது. இத்தேர்தலில் மூன்று பிரதான வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் பரிசீலிக்கப்பட்டன. இத்தேர்தல் விஞ்ஞாபனங்களில் குறிப்பாக தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு மற்றும் தமிழ் மக்களின் பிரதேசங்களின் பொருளாதார மேம்பாடு பற்றி கவனம் செலுத்தப்பட்டது.

இவ்விஞ்ஞாபனங்களில் புதிய அரசியலமைப்பு உருவாக்குதலும் ஏற்கனவே அரசியலமைப்பில் உள்ள பதின்மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தத்தை முழுமையாக அமுலாக்குவதும் ஆகும். ஒற்றையாட்சி மற்றும் புத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளமை ஏற்றுக்கொள்ள முடியாதனவாகும். அதற்குப் பதிலாக இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வாக தமிழ் மக்களுக்கான சுயநிர்ணய உரிமை அடிப்படையில் சமஷ்டிக் கட்டமைப்பின் மூலம் தீர்வு காணப்படுதல் வேண்டும் என்பது பிரதானமாகும்.

முக்கியமாக இவ்விடயங்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய மக்கள் கூட்டணி தலைவர் சஜித் பிரேமதாச, ஜே.வி.பி தலைவர் அநுர குமார திசாநாயக ஆகியோருடன் நேரடியாக பேச்சுக்கள் நடைபெற்றன. தமிழ் அரசியல் தலைமைகள் தமிழ்ப் பேசும் மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு காணும் பொருட்டு இணைப்பாட்சி அடிப்படையிலான சமஷ்டிக் கட்டமைப்பில் முழுமையான தன்னாட்சி சம்பந்தமாக தொடர்ந்து போராடி வந்துள்ளோம். ஜனாதிபதித் தேர்தல் முடிந்ததும், புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தின் பொருட்டு தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் தீர்வுக்கான பிரேரணை முன்வைக்கப்படுதல் வேண்டும்.

தமிழ்ப் பேசும் மக்கள் என்ற வகையில் முஸ்லீம் சமூகத்துடனும் மலையக தமிழர்களுடன் இணைந்து செயல்படுதல் வேண்டும். 13ஆவது அரசியல் திருத்தம் அரசியலமைப்பின் ஒற்றையாட்சிக்குட்பட்டது. இதனை அரசியல் தீர்வாக எம்மால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதைக் குறிப்பிட வேண்டும். இருப்பினும் தமிழினத்தின் பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வொன்றை அடையும் வரை இந்திய அரசின் நட்புறவுடன் 13ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் நடைமுறையிலிருக்கும் மாகாண அரசியலமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்த நாம் முழு ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும்.

2002 டிசம்பரில் ஏற்பட்ட ஒஸ்லோ உடன்பாட்டில் சில அடிப்படைக் கோட்பாடுகளின் மீது இணக்கம் காணப்பட்டது. அக்கோட்பாடு பின்வருமாறு அமைந்தது. இந்த வரலாற்று நிகழ்வு இன்றும் பரிசீலனைக்குரியது. “ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழ்பேசும் மக்களின் வரலாற்று ரீதியான வாழ்விடப்பகுதிகளில் உள்ளக சுயநிர்ணய கொள்கையின் பிரகாரம் சமஷ்டிக் கட்டமைப்பின் அடிப்படையிலமைந்த தீர்வொன்றை ஆராய்தல் என்பதாகும். சர்வதேச நியமங்களின் படியும், சர்வதேச சாசனங்களின் படியும் தமிழர்களாகிய நாங்கள் தனிச்சிறப்புமிக்க மக்கள் குழாமாவோம்.

ஒருமக்கள் குழாமான நாங்கள் பேரினவாதத்தின் பிடிக்கு ஆட்படாது கௌரவத்துடனும் சுயமரியாதையுடனும், சுதந்திரமாகவும், அச்சமின்றியும் நாட்டின் ஏனைய மக்களுடன் சமத்துவமுள்ள மக்களாக வாழ விரும்புகிறோம். 2015 இல் இலங்கை வந்த பாரதப் பிரதமர் நரேந்திர மோடி மார்ச் 13இல் இலங்கையில் பாராளுமன்றத்தில் உரையாற்றிய போது பின்வருமாறு கூறினார். “எமது சமூகத்திலுள்ள அனைத்துப் பாகங்களின் அபிலாசைகளுக்கு நாம் மதிப்பளிக்கும் போது எம்நாட்டின் ஒவ்வொரு பிரஜையின் சக்திகளையும் எமதுநாடு உள்வாங்கிக் கொள்ளும். மாநிலங்கள், மாவட்டங்கள் மற்றும் கிராமங்களை இவ்வாறு வலுவூட்டும் பொழுது நாடு மென்மேலும் மேம்படும் கூட்டுச் சமஷ்டியில் நான் திடமான நம்பிக்கை கொண்டவன்” என்பதையும் குறிப்பிட்டார். “இறையாண்மை என்பது மக்களிடமே உண்டு அரசிடம் அல்ல என்பதை நாம் வலியுறுத்துகிறோம். “ஜனாதிபதித் தேர்தல் முடிந்தபின் எங்களால் சமர்ப்பிக்கப்படும் அரசியலமைப்புக்கான அறிக்கையில் குறிப்பிடப்படும் தமிழ்த்தேசிய இனத்திற்கான அரசியல் தீர்வை அடைவதற்கும், தமிழ் மக்கள் எதிர்நோக்கியுள்ள நெருக்கடிகளுக்கும் தீர்வுகாண வெற்றிபெறும் ஜனாதிபதியுடனும் அரசுடனும் வேண்டிய பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்போம்.” தமிழ்த்தேச மக்கள் அரசியல் தீர்வைத் தீர்மானிப்பதிலும் அந்த இலட்சியத்தை அடைவதற்கும் இடர்களோ முரண்பாடுகளோ ஏற்படாமல் நல்லெண்ணத்துடன், ஒற்றுமை உணர்வுடன் தேர்தலின் போதும், எதிர்காலத்திலும் ஒன்றாக நின்று உழைப்போம் என திடமான தீர்மானத்தைக் கொண்டிருக்கிறோம்.’

இந்த நோக்கத்தை நாடளாவிய ரீதியில் செயல்படுத்துவதற்கென நாம் கடந்த காலத்தில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்களில் எமது பெரும் பங்களிப்பை வழங்கி இருந்தோம். ஆனால் பெரும் ஏமாற்றங்களும், வெறுப்பும், வேதனைகளுமே எஞ்சியுள்ளன. இப்போதைய ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக எம்மால் பரிசீலிக்கப்பட்ட மூன்று பிரதான வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் எதுவும் எமது அடிப்படை அரசியல் கோரிக்கைகளை முழுமையாக உள்ளடக்கவில்லை என்பதைக் கருத்தில் கொள்கிறோம். இந்த விஞ்ஞாபனங்களின் அடிப்படையில் எமது தாயகம், தேசியம், தன்னாட்சி, சுயநிர்ணயம் என்ற எமது அடிப்படைக் கோட்பாடுகளில் எந்தவித விட்டுக்கொடுப்பும் இல்லாத வகையில் ஐக்கிய மக்கள் கூட்டணி வேட்பாளர் சஜித் பிரேமதாசவின் விஞ்ஞாபனம் ஒப்பீட்டு ரீதியில் ஓரளவு திருப்தியாகக் காணப்படுகின்றது. எனவே, 2024 செப்டெம்பர் 21 ஆம் திகதி நடைபெற உள்ள ஜனாதிபதித் தேர்தலின் வாக்களிப்பின் போது ஐக்கிய மக்கள் கூட்டணியின் வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பதென்ற எமது கட்சியின் மத்திய குழுத் தீர்மானத்திற்கு அமைவாக வாக்காளர்கள் உரியவாறு தங்கள் வாக்கை அவருக்கு வழங்க வேண்டும் என அன்புடன் கோருகின்றோம் என்றுள்ளது. இதேவேளை இன்றையதினம் கலந்துகொண்ட ஆறு உறுப்பினர்களில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் மாத்திரம் குறித்த தீர்மானத்திற்கு இணக்கப்பாடு தெரிவிக்காதநிலையில் ஏனைய ஐவரும் தமது இணக்கப்பாட்டினை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.







## தமிழ்மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஏழாம் திகதி வரை கூட்டத்தினை வைக்க வேணடாம் என கூறியிருந்தேன். அவ்வாறு கூட்டங்கள் வைத்தாலும் தீர்மானங்கள் எடுக்கப்படாது என்று பொதுச் செயலாளர் சத்தியலிங்கம் எனக்கு உறுதிமொழியையும் தந்திருந்தார். தற்போதைய தலைவராக இருக்கின்ற மாவை சேனாதிராஜாவை 26 ஆம் திகதி சந்தித்து பேசுகின்ற போது நாங்கள் தீர்மானங்கள் எதுவும் நிறைவேற்றமாட்டோம் சில விடயங்கள் தொடர்பாக பேச இருக்கிறோம் என தெரிவித்திருந்தார்.

இவற்றையெல்லாம் தாண்டி ஆகஸ்ட் மாதம் 18 ஆம் திகதி ஆறு பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டு அந்தக் குழு கூடி தீர்மானம் எடுக்காத நிலையில் மத்திய குழுவில் அவசர அவசரமாக யாருடைய தேவைக்காக யாருடைய தீர்மானத்தை எடுத்தார்கள். சஜித் பிரேமதாசவுக்காக அந்த தீர்மானத்தை எடுத்துள்ளனர். அந்த தீர்மானம் எடுத்த பின்னர் நான் கடிதம் மூலமாகவும் தெரிவித்திருந்தேன், இது கூர்ணர்வற்ற ஒரு முடிவு இதனை நான் எதிர்க்கிறேன், என்னைப் பொருத்தவரை நான் கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக தொடர்ச்சியாக இந்த மக்களின் திரட்சிக்காக தமிழர்களுடைய தேசிய திரட்சியை கொண்டு வருவதற்கும் தமிழ் மக்களுடைய தேசிய உணர்வுகளை பிரதிபலிக்க கூடிய வகையிலும் நாங்கள் ஒரு பொது வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டும். பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்கின்ற ஒரு தெளிவான நிலைப்பாட்டை கொண்டு இருந்தேன். அதனை இப்போதும் கொண்டிருக்கிறேன். இன்றும் இந்தக் கூட்டத்தில் அதனை வலியுறுத்தி என்னுடைய கருத்து இவர்களுடைய தீர்மானத்திற்கு எதிரானது என்பதனை பதிவு செய்யுமாறு தெரிவித்து இருக்கிறேன்” என்று அவர் தெரிவித்தார்.

# அசாதாரணங்களின் காலம்

## யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் மாற்குவின் போர்க்கால ஓவியங்கள் காட்சி

பி.லஜீபன்

அசாதாரணங்களின் காலம் மாற்குவின் போர்க்காலல ஓவியங்கள் காட்சி என்ற கண்காட்சி யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறுகின்றது. கடந்த 9 ஆம் திகதி ஆரம்பமான இந்தக் கண்காட்சி எதிர்வரும் 20 ஆம் திகதி வரை நடைபெறம். பல்கலைக்கழக கலைக்கூடத்தில் காட்சிப்படுத்தல் நடைபெற்றுக் கொண்டுள்ளது.

கலை வரலாற்று கற்கை பயிலும் நான்காம் வருடம் முதலாம் அரையாண்டு மாணவர்களின் எடுத்தாளுகையில் பேராசிரியர் தா. சனாதனனின் கருத்துரு மற்றும் வழிகாட்டுதலின் கீழ் கண்காட்சி ஆனது ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

1980 களில் பெரிதும் பேசப்பட்டவரான அப்புஹாமி மாற்கு என்ற யாழ்ப்பாண ஓவியக் கலைஞரின் போர் சார்ந்த வெளிப்பாடுகளை உள்ளடக்கியதாக இக்கண்காட்சி அமைந்துள்ளது. மாற்கு யாழ்ப்பாணத்தில் நவீன வாதத்தினை அறிமுகம் செய்த பெருமைக்குரிய ஓவியராகவும் அதிகம் அவரது மாணவர்களின் மூலம் நன்கு அறியப்பட்ட வரும் பிரபல்யமானவராக காணப்படுகிறார்.

பொதுவாக போர்க்கால கலை வெளிப்பாடுகள் என்பது பெரும்பாலும் போரின் உண்மைகளை பற்றி கருத்து தெரிவிக்க, தனிப்பட்ட உணர்ச்சிகளை வெளிப்படுத்த, அல்லது வரலாற்று நிகழ்வுகளை ஆவணப்படுத்த தங்கள் வெளிப்பாடுகளை பயன்படுத்துதல் ஆகும். இது அவர்களின் கலையை அழகியல் மற்றும் வரலாற்று ரீதியாக குறிப்பிடத்தக்கதாக மாற்றியது. “மாரி கல்குன் என்ற எஸ்டோனிய நாட்டுப்புற இசைக்கலைஞர், பாடகர் மற்றும் இசையமைப்பாளர் அவருடைய கருத்தின் படி கலை என்பது போர் மற்றும் பயங்கரவாதத்தின் போது உணர்ச்சிப்பிரதிபலிப்புக்கள் மற்றும் நமது அனுபவங்களை வார்த்தைகளில்வைப்பதற்கான ஒரு வழியாகும்” என்கிறார்.



இவ்வாறு இலங்கையில் தமிழ்த் தேசத்திற்காகவும் சிறுபான்மை இனக்குழுவின் உரிமைக்காக வும் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம் சமூகத்தில், பொருளாதாரத்தில் ஏற்படுத்திய மாற்றம் தொடர்பான மாற்கு வின் கலைப் படைப்புகள் மிகவும் சிறப்பாக தெரிவு செய்யப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ள காட்சியின் ஒழுங்குமைப்பானது முதலாவதாக போர்சார் வன்முறைகளின் விவரிப்பு என்ற பகுதியின் ஊடாக போரினால் பாதிப்புக்குள்ளான மக்களின் அவல நிலைகள், குண்டு தாக்குதல்கள் நடந்த காட்சிகள், போரினால் ஏற்பட்ட பொருளாதார நிலைகள், நாளாந்த காட்சிகள் மற்றும் விலங்குகளுக்கு ஏற்பட்ட பிரச்சினைகளையும் நேரடியாக காட்சி ரீதியாக விளக்குவதாக உள்ளது.

இரண்டாவது பகுதியான புராண இதிகாச காட்சிகளின் ஊடாக போர் சார்ந்த விடயங்களை துலக்கி அதனுடாக ஒரு விதமான பிணிநீக்கும் செயற்பாட்டினை பார்வையாளர்களுக்கு வழங்கும் ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இவற்றில் இந்து, கிறிஸ்தவம், மற்றும் பௌத்தம் என மூன்று மத பாடு பொருட்களை உள்ளடக்கி உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

மூன்றாவது பகுதியாக போரின் விளைவுகளை மறைமுகமாக வெளிப்படுத்தும் ஓவியங்களின் காட்சியில் இடம்பெயர்வு காட்சிகள், சோகமான முகபாவத்துடன் காணப்படும் பெண்கள், வேண்டுதலை மேற்கொள்ளும் மனிதர்கள் போன்ற காட்சிகளும். மேலும் கூறினால் போரினால் ஏற்படும் பிரச்சனை ஒருபுறம் பேசப்பட்டாலும் போராட வேண்டும் என்ற எண்ணமும் மறுபுறம் பரப்பப்படுவதாகவும் இவரது படைப்புகள் இருப்பதனை அவதானிக்கலாம் உதாரணமாக துப்பாக்கியுடன் பிறக்கும் குழந்தையை சித்தரிக்கும் ஓவியம் என்பனவும் உள்ளடங்க பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நவீன வாதத்தினை உருவத்துடன் இணைத்து உள்ளூர் மயப் படுத்தப்பட்டதாக வெளிப்படுத்திய பெருமை இவரை சாரும். அந்த வகையில் உருவ முதமையுடன் விகாரப் படுத்தப்பட்ட கோடுகள் உடல்அவயங்களுடன்காணப்படும் கருப்பு வெள்ளை கோட்டு படங்கள், மற்றும் சஞ்சிகை தாள் மீது தனது எண்ணங்களை பெஸ்ரல் வர்ணம் கொண்டு வெளிப்படுத்தும் எளிமைத்துவமும் தெளிவும் கொண்ட ஓவியங்கள், மேலும் இரண்டு சுய மெய்யுருக்களுடன் காட்சியானது ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

மேற்படி ஊடகங்களின் நோக்குகையில் போர்க்கால சூழ்நிலையில் ஒரு கலைஞரின் பொருளாதார நிலை அக்கால சமூகத்தில் ஏற்பட்ட திடீர் மாற்றங்கள், மரணங்கள் எவ்வாறு ஒரு கலைஞனின் கலைப்படைப்பில் எவ்வாறான தாக்கத்தை புரிகின்றன என்பதனை அவதானிக்க முடிகின்றது. மேலும் இக்கண்காட்சியானது கல்வி ஊட்டல் நிகழ்வுகளின் அடிப்படையில் கடந்த 11 ஆம் திகதி “சாம்பல் பூத்த தெருக்களில்” இருந்து என்ற கவிதை தொகுப்பு வாசிப்பை மிகவும் சிறந்த முறையில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத் தமிழ் துறை மாணவர்களால் நடத்தப்பட்டது.

அத்துடன் நாளை பி.ப. 3.00 மணிக்கு “மாற்கு மாஸ்டரின் சித்திர வகுப்பு” என்ற தலைப்பில் பாடசாலை மாணவர்களுக்கான சஞ்சிகைத்தாள் மீது அவர்களது எண்ணத்தில் தோன்றும் காட்சிகள் மற்றும் உருக்களை வரைய செய்யும் வகையிலான நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு பல சிறப்புக்களுடன் இக்கண்காட்சி ஒழுங்குபடுத்த பட்டுள்ளது

வயலும் வயல்சார்ந்த இடமுமான ‘மருதம்’ நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்






# கிழக்கு மெய்வல்லுனர் போட்டிகள் பட்டிருப்பு கல்வி வலயம் முதலிடம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கிழக்கு மாகாண மட்ட போட்டிகளின் பட்டிருப்பு கல்வி வலயம் மீண்டும் சாம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளது. 28 தங்கப் பதக்கங்களுடன் 189 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது.

பட்டிருப்பு கல்வி வலய பாடசாலைகள் அடிப்படையில் 95 புள்ளிகளுடன் களுதாவளை மத்திய மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை) 95 புள்ளிகளையும்,

செட்டிபாளையம் மகா வித்தியாலயம் 58 புள்ளிகளையும், மண்டூர் சக்தி மகா வித்தியாலயம் 18 புள்ளிகளையும், .பழுகாமம் கண்டுமணி மகா வித்தியாலம் 5 புள்ளிகளையும் மகிழூர் சரஸ்வதி மகா வித்தியாலயம் 5 புள்ளிகளையும், மண்டூர் விக்னேஸ்வரா மகா வித்தியாலம் 5 புள்ளிகளையும். 03 தேற்றாத்தீவு மகா வித்தியாலயம் 3 புள்ளிகளையும்,கோட்டைக்கல்லாறு மகா வித்தியாலயம் 1 புள்ளியையும் பெற்றுக் கொண்டன.

பதக்கப்பட்டியலில் அடிப்படையில்

12 தங்கப்பதக்கங்களுடன் களுதாவளை மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை )முதலாம் இடத்தையும்,

10 தங்கப்பதக்கங்களுடன் செட்டிபாளையம் மகா வித்தியாலயம் இரண்டாம் இடத்தையும்,

03 தங்கப்பதக்கங்களுடன் மண்டூர் 14 சக்தி மகா வித்தியாலயம்

மூன்றாவது இடத்தையும் ,

பழுகாமம் கண்டுமணி மகா வித்தியாலயம்,. மகிழூர் சரஸ்வதி மகா வித்தியாலயம் . மண்டூர் விக்னேஸ்வரா மகா வித்தியாலயம் ஆகியன தலா 1 தங்கப்பதக்கத்தையும் பெற்றுக்கொண்டன.




# உகன மாணவி சர்வதேச போட்டிக்கு தெரிவு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

இலங்கை 19 வயதிற்குட்பட்ட தேசிய பெண்கள் கிறிக்கட அணியில் அம்பாறை மாவட்டத்தின் மிகவும் பின்தங்கிய கிராமப்புற பாடசாலையான உகன தேசிய பாடசாலை மாணவி பிரமுதி மெத்சரா இடம்பெற்றுள்ளார்.

அவுஸ்திரேலியாவில் இடம்பெறவுள்ள 29 வயதிற்குட்பட்ட பெண்களுக்கான சர்வதேச கிறிக்கட் போட்டியில் கலந்து கொள்ளும் வாய்ப்பினை பெற்றுள்ளார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.09.2024இல் வெளியிடப்பெற்றது.